வகையில் செலவுப் பொறுப்புகளைச் சரிக்கட்ட ரூ. 33 கோடி கூடுதலாக ஒதுக்க வேண்டியிருந்தது. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு மாநில நிலவள வங்கி ஆகியவற்றின் பங்கு மூலதன அமைப்பை வலுப்படுத்தும் வகையில், அவை அரசுக்குச் செலுத்த வேண்டிய கடன்கள் ரூ. 17.37 கோடி பங்கு மூலதனமாக மாற்றியமைக்கப்பட்டது. அரசுப் பணியாளர்களின் வீடு கட்டுவதற்கான முன்பணத் தேவைகளைக் கருத்தில் கொண்டு கூடுதலாக ரூ. 6.39 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம், வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சி நிறுவனத்திற்குக் (HUDCO) கடன் தொகையைத் திருப்பிச் செலுத்துவதற்காக அந்த இணையத்திற்கு ரூ. 6.33 கோடி வழங்க அனுமதி வழங்கப்பட்டது.

பல்வேறு கோரிக்கைகளின் கீழ் தேவைப்படக் கூடிய கூடுதல் நிதி ஒதுக்கம் குறித்த விவரங்கள் அவையில் வைக்கப்பட்டுள்ளன. இதில் கோரப்பட்டுள்ள மதிப்பீடுகளுக்கு ஒப்புதல் அளித்து அரசுக்கு தேவையான நிதி ஒதுக்கத்தை வழங்க வேண்டுமென இந்த அவையை வேண்டி அமர்கிறேன். வணக்கம்.

(முற்பகல் 11-00)

4. அறிவிப்புகள்-தொடர்ச்சி

(ஆ) வெட்டுத் தீர்மானங்கள் கொடுப்பது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1988-89ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள மானியக் கோரிக்கைகள் மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்புகிற உறுப்பினர்கள் அவற்றைப் பேரவையின் 190-வது விதிக்கு இணங்க, 29–3–1989 புதன்கிழமை பிற்பகல் 3-00 மணிக்குள் செயலகத்தில் கொடுக்க வேண்டும்.

6. அரசினர் சட்டமுன்வடிவு.

நிதி ஒதுக்கச் (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு, 1989.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் (உடனடிச் செலவுக்கான மானிய அனுமதி) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 6/1989) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."